# ஸ்ரீ மஹாபாரதம்.

## விராடபர்வம்.

கும்பகோணம், கோபாலவிலாஸ புஸ்தகசாலைத்தலைவர்
மத்வசாஸ்த்ரஸம்பூர்ணர்,
**ப்ரம்மஸ்ரீ - அ. வேங்கடேசாசார்யர்**
அவர்களால்
159
மொழிபெயர்க்கப்பெற்று,
திருப்பனந்தாளாதீனம்
மஹாகனம்பொருந்திய
ஸ்ரீலஸ்ரீ - காசிவாசி,
**சோமசுந்தரத்தம்பிரான் அவர்கள்**
உதவியைக்கொண்டு,
கும்பகோணம் காலேஜ் தமிழ்ப்பண்டிதர்
**ம. வீ. இராமாநுஜாசாரியரால்**
பதிப்பிக்கப்பெற்றது.

---

விலை ரூபா 2-0-0; தபால்சார்ஜ் ரூபா 0-4-0.

---

Madras:
PRINTED AT THE VAIJAYANTI PRESS,
*32, MOUNT ROAD.*

*1912.*

*(All Rights Reserved.*

ஸ்ரீ:

# முகவுரை.

பலஅரியவிஷயங்களைத் தன்னிடத்துக்கொண்டிருக்கிற இந்தப் பெருநூலை வடமொழிக்கு ஸரியாக மொழிபெயர்த்து வெளியிடுவதிலுள்ளச்ரமம், அறிவுடையோர்களுக்குத் தெரிந்ததேயாதலால், நான் இங்கு அதனை அதிகமாக விவரிக்கவில்லை. இவ்விஷயத்தில் எனக்குண்டானகவலை எல்லையில்லாமலிருந்தது. அது ஸ்ரீ கண்ணபிரானுடையதிருவருளால் ஒருவாறுநீங்கித் தைர்யம்அடைகிறேனென்பதைக்கேட்கிறஆஸ்திகஸஜ்ஜனர்கள் த்ருப்தியடைவார்கள். மொழிபெயர்ப்பு அனேகமாகப்பூர்த்தியாயிற்றென்றே சொல்லலாம். உலகத்தில்வழங்கும்பலபாஷைகளிலுமுள்ளநூல்களுள்ளும் இவ்வளவுபெரியதும் அரியதும் ஹிந்துமதஸம்பந்தமான எல்லாவிஷயங்களையும் தெரிவிப்பதுமான நூல்வேறில்லை என்பது எழுத்தாலும் சொல்லாலும் எல்லாரும் ஒப்புக்கொண்டது. எதிர்பாராத பல அஸௌகர்யங்களால் சிலசிலஸமயங்களில் ஸஞ்சிகைகள் காலத்தில் வெளிவாராமற்போயின. பெரியோர்கள், கார்யத்தின்ச்ரமத்தையும் பெருமையையும்உத்தேசித்து க்ஷமிப்பார்களென்றுநம்புகிறேன். இனி ஸஞ்சிகைகளைக் காலத்தில்வெளியிடவேண்டுமென்று மிக முயற்சிசெய்துவருகிறேன்.

இந்தமஹாபாரதம் பூர்த்தியானபிறகு, விரிவான முகவுரையொன்று எழுதப்பெறுமாகையால், இந்தப்பெருங்கார்யத்துக்குவேண்டிய உதவிகளைச்செய்து ஆதரித்துவருகிறவித்வான்கள் ப்ரபுக்கள்முதலியவர்கள் பெயர்களைப் பின்பு வெளியிடுவேன். அவச்யம் தெரிவிக்கவேண்டிய சிலவிஷயங்களைமாத்ரம் இங்கே தெரிவிக்கிறேன்.

தேசாபிமானமும் பாஷாபிமானமுமுள்ளதனவான்கள் கையொப்பம்செய்து உத்தமோத்தமமான இந்தஸத்கார்யத்தில் என்னை உத்

ஸாஹப்படுத்திவருகிறதற்கு நான் அவர்கள்விஷயத்தில் மிக்க நன்றி யறிவுள்ளவனாகவிருக்கிறேன்.

திருப்பனந்தாள் ஆதீனம், மஹாகனம்பொருந்திய ஸ்ரீலஸ்ரீ, காசிவாசி, சோமசுந்தரத்தம்பிரானவர்கள், நான், இதனைத் தொடங்கியதுமுதல், அடிக்கடி விசாரித்து ஆதரித்து, எனக்கு மனத்தளர்ச்சியுண்டாகாமல் ஊக்கமளித்துவருவதோடு பாரதத்துள் *ஸாரமானவிராடபர்வத்தை விரைவில்வெளியிடவேண்டுமென்று வற்புறுத்திச்சொல்லி, அதற்குவேண்டும் பொருளுதவியும்செய்தார்கள். அவர்கள்செய்தஇப்பெருநன்றியை நான் எந்நாளும் மறவேன்.

"செய்யாமற் செய்த உதவிக்கு வையகமும்
வானகமு மாற்ற லரிது."

என்றபடி அவர்கள்செய்யும்பேருதவிக்கு யான்செய்யும் கைம்மாறு யாதுளது?

இந்நூலின்பெருமையையும் எனதுசிறுமையையும்பார்த்து, என்னவிதமானகுற்றங்களிருப்பினும் க்ஷமித்து, தெரிவிக்கவேண்டியவைகளைத்தெரிவித்து, என்னைத்திருத்தி ஆதரித்து, இக்கார்யம்பூர்த்தியாகும்படி செய்யவேண்டுமென்று பெரியோர்களை நிரம்ப வேண்டுகிறேன்.

இடையூறுசிறிதுமின்றி, இஃது இனிதுநிறைவேறும்படி செய்வித்தருளவேண்டுமென்று எல்லாம்வல்ல ஸர்வேச்வரனை ப்ரார்த்திக்கிறேன்.

இங்ஙனம்,

ம. வீ. இராமானுஜாசார்யன்.

* 'விராடோத்யோகஸாரவாம்' என்பது பாரதத்திலுள்ளவாக்யம்.